# Leaders of Religious Bodies to Meet L T T E

Leaders of Christian, Hindu, Muslim and Bud dhist communities are planning to meet L. T. T. E. in Wanni after Thai Pongal. This meeting is of great importance since the re - elected President Chandrika Bandaranaike Kumaranatunge has invited the L. T. T. E. leader to come for negotiations. The religious leaders will first meet the President and then take her message to the L. T T. E, whose base now is in Mullaitivu Kilinochchi and Vavuniya districts.

THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 160 Jaffna Friday 15th, January 2000 No. 01

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*

## Fighting Continues in East Jaffna

As we go to press we continue to hear noises of artillary shelles fired in Ele- phant - pass and in areas around the Camp

People in Vadamaradchey East, Thenmaradchy, Passai- yoor and Karaiyoor have moved into the central parts of the Peninsula.

## Girls Home Escape Artillary Shell

The C S I Girls home at Chavakachcheri had a miracul- ous escape when shells were firerd at Chavakachcheri. One shell hit the Poliee station which was just in front of the Girls Home. The Girls Home is now temporarily colsed.

## "Valampuri" A New Jaffna Daily

On the Christmas day 1999 a new daily news paper with the name "Valampuri" was startd It is a four page news peaper and the cost of a single copy is five rupees.

## New Millennium

In Jaffna there was absolutuly no excitement about the New Year and the New Millennium. Because of the conflict in East Jaffna people were moving into interior Villages. In Thenmaradchy East very few attended the Christmas Services. However Carol Party visited houses till 9. 00 p. m. People were seen queuing up in front of shops to buy Kerosene Oil.

## Moring Star Notice

Annual Subscription
Foreign — £ 10
Life Subscription
Foreign — £ 1000
Annual Subscription
Local — Rs 100/-
Life Subscription
Local Rs 1000/-

Cheques can be drawn in favour of the Morning Star

A/C No. 16400760 - 01
Commercial Bank
Colombo — 06

and sent to
Mr. N. S. P. Tampoe
39, Fussels Lane
Colombo — 06.

## Chavakachcheri No Change.

Chavakaehcheri remain's deserted and gloomy. Our Minister Rev. T. H. Vasntha- kumar continues to stay in the parsonage.

## Seventy Fifth Birthday of Miss Appakutty

Miss Thangammah Appa- kutty the well known philon- throrpist and Hindu revivalist will be Seventy five on Friday 7th January 2000. Elaborate arrangements are made to celebrate her birthday at Tellip- pallai and Nallur. A "mother's' Home" will be opened at Tellippallai Durka Temple. Many luminaries of Jaffna will be speaking on that occa- sion.

## Election Peaceful in Jaffna.

Polling was peaceful in Jaffna on the Presidential election day in Jaffna Mrs. Chandrika Bandaranaiaka polled 3471 Votes and Mr. Ranil Wickremasinghe polled 3/63 Votes.

## JAFFNA TODAY

"The problems curently prevailing in Jaffna are com- plicated and complex. They are not problems solely created by the poverty endemic in South Asia and signal a multi- ple burden situation. Unfor- tunately the authorities and institutions do not realise this fact and are trying to tackle the problem in the normal way. This has led to the mix up of priorities and are the main reason for the diminished impact of the reha- bilitation effort.

The awareness programmes bombastic in scope, Without substanee, was the main reason for the problems not being tackled. For example the awar- eness programme on malnutri- tion was irrelevant as the main cause of poverty was due to acute and under employ ment created by various restri- ctions on income generatin activities.

## Training Programmes

Most of the training pro- grammes carried out for social mobilisation are elementary and based on theoretical not appropriate to Jaffna.

Finding solutions through social mobilisation appears to be a laborious task in the current context. For success a comprehensive and realistic, feasible programme which is at the same time sustatinable would bring both short term as well as long term results. Also those who undertake the task should be dedicated volunteers and not monthly paid officers whose commit- ment to the cause is uncertain.

## Sensitization Programme

This is a prerequiste for planning and training program- mes but none has been orga- nised in Jaffna. The post raining situation should be thoroughly analysed in detail before a particular training is selected so that it will address the immediate needs of the people and tally with the public perception, whether

1) favourable environment opportunities exist for the utilisation of the training,

2) resources are available for the trained persons to benefit themselves, and

3) production cycles will be boosted to generate sufficient income earning capa- city for those employed.

Although Sri Lanka adopts an open economy policy this is not applied to Jaffna and until such time as this condition is met, appropriate measures should be regulated to creating favourable market conditions for local productsg

## Participatory apporach

Participatory appreaches to Training Programmes focus on the initiation of staff to new methods and techniques. The training at present is often insufficient to enable staff to

(Contd Page 4)

## On Holiday in Jaffna

Mr. D. S. Solomon who is now following a special course at Tamil Nadu Theo- logical Seminary came to Jaffna for the Christmes holidays. He is planning to leave for Colombo on Thursday Sixth January.

## Jubilee Year Calendar

We heartily welcome the Jubilee year Calendar of the Jaffna Diocese of the Roman Cotholic Church. The infor- mation and data given in the Calendar are of great value. The names of the Roman Catholic Bishops of Sri Lanka the names of the Roman Catholic Priests in Jaffna, the names of the religious orders serving in Jaffna with the names of the priests and runs, the institutions run by the Church are listed.

The Calendar also gives the dates of the Church festi- vals in the Diocese

It has been printed at St. Josephs Catholic Press and is distributed free of charge. It a serves not only as Calendar but also as a hand book of the Church.

However we wish to point out that Thai is not the Tamil word for January. The Tamil Month Thai begins on the 14th January. There is no Tamil word for January It is written as ஜனவரி in Tamil

இந்தியாவில்

# போப்பாண்டவரின் செய்தி

திருத்தந்தையின் இந்திய விஜயத்தின் போதுபெரும் சர்ச்சையை உண்டு பண்ணிய விடயம் மதமாற்றம் என்பதாகும். கிறிஸ்தவர்கள் இந்திய மக்களை மதமாற்றியதற்காகத் திருத்தந்தை அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் இந்தியாவில் நடந்து கொண்டிருக்க அவ்விடயம் பற்றித் திருத்தந்தை தமது விஜயத்தின் போது கூறியது

மதம் என்பது தனியொருவரின் உரிமையாகும். ஒருவர் தமது மனச்சாட்சியின் படி உண்மையென்று கருதினால் அவர் தாம் விரும்பிய மதத்துக்கு மாறுவது அவரது அடிப்படை உரிமை என்பதை அனைவரும் அங்கீகரிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும் முதலாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வேரூன்றிய கிறிஸ்தவம் 2ம் நூற்றாண்டில் அமெரிக்கா ஆபிரிக்கா நாடுகளில் காலூன்றியது. இந்த மூன்றாம் மிலேனியத்தில் ஆசிய நாடுகளில் கிறிஸ்தவ விசுவாசத்தினை அறுவடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அமைதிக்கும் சுதந்திரத்துக்குமிடையே நெருங்கிய உடைக்கப்பட முடியாத பிணைப்பு உள்ளது என்பதை ஏற்கவேண்டும்: சுதந்திரத்தை சுதந்திரமாக செயற்படுத்துவதும் ஒன்றாகும் எந்த வொரு நாடோ, குழுவோ ஒருவரின் சமய நம்பிக்கையினை நேரடியாகவோ, மறைமுகமாகவோ சட்டுப்படுத்துகின்ற உரிமையைக் கொண்டிருக்கவில்லை.

இந்தியாவின் பேரரசர்களான அசோகர், அக்பர் மற்றும் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மாகாந்தி, தாகூர் போன்றவர்கள் உரையாடல்கள் சகிப்புத் தன்மை என்பவற்றைப் பின்பற்றியவர்கள்; வளர்ந்தவர்களாவர். எதிர்காலப் பாதைக்கு சகிப்புத் தன்மையையும் உரையாடலையும், ஒத்துழைப்பையும் தேர்ந்தெடுப்பது என்பது மனித குலத்தின் மாபெரும் சமயப் பாரம் பரியத்தின் மிகவும் நேர்த்தியானதைப் பாதுகாப்பதாகும். வரவிருக்கும் நூற்றாண்டில் மனித இயக்கத்தின் வாழ்வளிக்கும் உறுதியான நம்பிக்கையின்றி உலகம் இயங்காது என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. என்றும் தெரிவித்தார் திருத்தந்தை.

... விருட்சம் ...

## கல்கி நூற்றாண்டு



"டிசம்பர் மாதம் 5ம் திகதி கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி தினமாகும் இந்த வருடம் கல்கி உயிருடன் இருந்தால் அவருக்கு நூற்றியொரு வயதாயிருக்கும் இந்த வருடம் தென்னிந்தியாவின் பல பாகங்களில் குறிப்பாக சென்னையில் அவருடைய நூல்கள் சிறப்பாக வெளியிடப்பட்டன.'

பின்வருவது அழகு ராணிப் போட்டி பற்றிக் கல்கி அவர்கள் 1952ல் கூறிய கருத்து.

இப்போது உலக அழகிப் போட்டிகளில் இந்தியாவைச் சேர்ந்த பெண் வெற்றி பெற்று விட்டாள் என்று நம் நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் அந்த அழகியைப் புகழ்வதைப் பார்த்திருக்கிறோம்.

இது போன்றதொரு பைத்தியக்காரத்தனம் கல்கி வாழ்ந்த காலத்திலும் சென்னை நகரிலும் நடந்தது.

வருஷம் சரியாக நினைவில் இல்லை. 1952ம் வருஷம் என்று நினைக்கிறேன் அழகிப் போட்டி என்ற பெயரால் ஒரு போட்டி சென்னையில் நடந்தது. அந்தச் செய்தியை அப்போது தமிழ் நாட்டில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து படங்களைப் போட்டு வெளியிட்டிருந்தன. அதைப் பார்த் கல்கி அவர்கள் துடிதுடித்துப்போய்விட்டார். இது அழகிப் போட்டியா? அவலட்சணப் போட்டியா? என்று வன்மையாக அந்தப் போட்டியைக் கண்டித்து எழுதினார்.

அவர் எழுதியதை எழுத்திற்கு எழுத்து அப்படியே நான் எழுதவில்லை. அவர் என்ன எழுதினார் என்பது மட்டும் என் நினைவை விட்டு இன்னும் அகலவில்லை.

இது போன்ற அபத்தப் போட்டிகளுக்கு ஊக்கம் அளிக்கக் கூடாது என்பதைத் தமக்கே உரிய பாணியில் கேலியும் கிண்டலுமாக, வன்மையாகக் கண்டித்து எழுதியிருந்தார்.

"அழகிப் போட்டி என்ற பெயரால் ஒரு அவலட்சணப் போட்டி சமீபத்தில் சென்னையில் நடந்தது"

"இது போன்ற போட்டிகளைத் தமிழ் நாட்டில் நடக்க அனுமதிப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது.

"பாரத நாட்டின் பழமையான தர்மத்துக்கும், பண்பாட்டுக்கும், நம் மக்களின் இரத்தத்தில் ஊறிப் போயிக்கும் நாகரிக உணர்ச்சிகளுக்கும் விரோதமானது இந்த அழகிப் போட்டி"

"இதில் சென்னை நகரத்தின் முக்கிய பிரமுகர்களும் 'ரஸிகர்' கள் என்று பாராட்டப் பட்டவர்களும் கலந்து கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்குரியது"

கல்கி அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் அந்தப் பிரமுகர் குழுவில் இருந்தனர்.

"பெண்கள் எல்லாரையும் தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும், பராசக்தியின் வடிவங்களாகவும் கருதிப் போற்றும் பண்பாடு, பாரத நாட்டின் பண்பாடு.

தாய்மார்களையும் சகோதரிகளையும் கொண்டு வந்து பலர் பாக்க நிறுத்தி, முன் அழகு. பின் அழகு பார்த்து அவர்கள் அணிந்திருக்கும் ஆடை அலங்காரங்களை எடை போட்டு ஆடவிட்டு அழகிப் போட்டி நடத்துவது எவ்வளவு அருவருக்கத்தக்க விஷயம்? எவ்வளவு கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டி விடக் கூடிய காரியம்?"

- பகிரதன்

## வேதநாயகம்....

"வரங்களை அளிபும் வேதநாயகனை

வழி வழி அடிமையாய்க்

கொள்ளும்.

என்று மனதருகிப் பாடியுள்ளார்.

அவர் வேண்டுதலின்படியே பரம்பரை பரம்பரையாக கிறிஸ்துவின் தொண்டராயினர் சந்ததியினர்.

மகன் நோவா ஞானாதிக்கம் 1864 முதல் 1902 வரை தஞ்சாவூரில் பணியாற்றினார். பின்னர் இன்னொரு மகனாகிய எலியா தேவசிகமணி சாஸ்திரியார் தஞ்சாவூரில் பணியாற்றினார்.

அவர்களைத் தொடர்ந்து வேதானந்தம் சாஸ்திரியாரும் தஞ்சாவூரில் பணியாற்றினார். வே. சேம். வேதநாயக சாஸ்திரியார் சென்னையிலிருந்து பணியாற்றினார்.

இப்போழுது பாகவதர் வேதநாயக சாஸ்திரியார் சென்னையிலிருந்து பணிபுரிந்து வருகின்றார்

# நமது இறையியல் OUR Theology

'புதியதோர் உலகம் செய்வோம் வராத்தைப் படைப்போம்

Contextual Social Theotogy சமூக சூழமைவு இறையியலானது இன்றைய இறையியல் வரலாற்றில் புதிய தொரு அத்தியாயமாக அமைந்துள்ளது,

நமது பைபிலின் படி இறைவனின் படைப்புகள் யாவும் சீரானதாகவும் திட்டவட்டமான இறையியலில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது, மனிதனின் செயற்கையை நோக்காகிய அசைவானது ஒழுங்கமை உருவாக வழிவகுத்தது, எனலாம் அவ்வாறான நிலையில் தான் நம் ஆண்டவரின் வருகை ஒரு மீட்பாகவும் புதிய கட்டளைக்கான தளமாகவும் அமைந்தது. கிறிஸ்து புதிய கற்பனைகளுடனும் புதிய வாழ்க்கை தந்துவத்துடனும் செயற்பட்டாலும் சிலுவை மரணம் அடைய காரணம் சமூகத்தின் ஒழுங்கமைவின்மையே (Dis Organization) ஆகும்

சி. ஸ்டீபன்ராஜ்

ஒவ்வொரு சமூகத்திற்கும் என்ற சில வரையரைகள் விழுமியங்கள் நியமங்கள் காணப்படுகின்றன, அவைகள் மறுக்கப்படும் போது அல்லது சிதைக்கப்படும் போது விழுமிய முரண்பாடு (Value Conflict) தோற்றுவிக்கப் படுகின்றது,

பல பண்பாட்டு குழுக்கள் காணப்படும் சமூகத்தில் அவ்வாறான முரண்பாடுகளை தவிர்க்கவும் முடியாது,

பல பண்பாடுகள் ஒன்றோடொன்று இணையாத சூழலில் சமூக மேம்பாட்டையும் எட்ட முடியாது,

அந்தவகையில் எங்கள் சமூகம் சமூக கட்டமைப்பில் பல சாதி அமைப்புகளை கொண்ட சமூகமாகும்,

நாட்டில் பல இனங்கள் மொழி ரீதியிலும் மத ரீதியிலும் பிரிந்துபட்டு காணப்படும் சமூகமாகும்,

பொருளாதார நிலையில் நலிவடைந்த சமூகம்,

உலக தொடர்புகள் அல்லது உலக மயமாக்கம் Globalization) அதிகமற்ற சமூகம்.

நிலப்பரப்பில் குறைவாகவும் கூடிய சனத்தொகையையும் கொண்ட சமூகம்,

அரசியல் சமூக ஊழல்கள் நிறைந்த சமூகம்.

உலகெங்கும் மக்கள் அவல நிலையுடன் பரவியிருக்கும் நிலையைக் கொண்ட சமூகம்.

சுமார் இரண்டு தசாப்தங்கள் இனப் பூசல்கள் நிறைந்து காணப்படும் சமூகம்,

இவ் வாறான ஒரு நிலையில் இன்று தமிழராகிய நாம் வரலாற்றை இழந்து விழுமியங்களை கைவிட்டு இரண்டாம் தர பிரஜைகளாக ஏங்கி நிற்கின்றோம்.

அன்று இஸ்ரவேலர் நமக்கு ஒரு மீட்பர் வரமாட்டாரா என ஏங்கியது போன்று இன்று நாம் நமக்கு ஒரு விடுதலை கிடைக்காதா? அடுத்த வருடம் சுபீட்சம் கிட்டாதா? என ஏங்கி நிற்கின்றோம். கற்பாறையிலும், சுடுகாட்டிலும், தெருவோரத்திலும், முட்புதரிலும், பாழடைந்த வளவிலும் யுத்த தளங்களுக்குள்ளும் உயிர்வாழ முடியாத சுழலிலும் நிமிர்ந்து நிற்கின்ற பனைகளை போன்று. எத்தனையோ சமூக சிக்கல்கள் மத்தியிலும் ஏதோ தமது விழுமியம் அறிவு என்று ஒரு சில வற்றை தமது வரலாறாக கொண்டு வாழுகின்ற அதாவது பல காயங்களுடனும் பராமரிப்பற்ற நிறைந்த காவோலைகளுடனும் காணப்படும் பனை போன்றும், வாழ முடியாவிட்டாலும், வாழ வேண்டும் என்ற உணர்வுடன் வாழும் எம் உடல் பிறப்புகளுக்கு ஒரு இறையியல் தோற்றுவிக்கப்படுவதற்கு இதுவே காலமாகும்.

அத்துடன் எமது சூழலை புரிந்து கொண்ட எம்மோடிருக்கும் புத்தி ஜீவிகளால் எமது மக்கள் இறையன்பை புரிந்து கொள்ள ஏங்குகின்றனர் அவர்களில் ஏக்கங்கள் நிறைவேற்றப் படுவதற்கு இதுவே காலமாகும்.

சமூக அசைவியக்கத்தில் புதியதோர் உலகம் சமைப்போம் புதுமை காண்போம்! மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமை, இரட்சிப்பு, என்று எண்ணுங்கள்,

1 பேது : 3 : 15

உதயதாரகை
3 15 - 01 - 2000

## தாரகைஒளி

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்
சங்கீதம் 91 : 12

புத்தாயிரம் வருடம் புலர்ந்விட்டது! இயேசுபிரான் மண்ணில் அவதரித்து 2000 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன!! உலகமெங்கணும் மகிழ்ச்சி. ஆரவாரம் அமர்க்களம். புதிய ஆயிரம் வருடத்திற்குள் பிரவேசிக்க இறைவன் நமக்கு சந்தர்ப்பம் தந்தார் என்று ஆனந்திக்கின்றனர்!!!

நமது நாட்டில் நமக்கு ஒரு கடமையுண்டு. அழுகுணிச்சித்தர்களுக்கு இந்த உலகில் இடமில்லை.

வருங்காலத்தைக்குறித்த நல் நம்பிக்கையைத் தருபவனே நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றான்.

இரண்டாம் ஏசாயா தீர்க்கன், சங்கீதகாரன், தரிசனகாரன், வருங்காலத்தைக்குறித்த நல்ல நம்பிக்கையைப் பரப்பியவர்கள். பவுல் அப்போஸ்தலன் இன்றைய பாடுகள் இனி வெளிப்பட இருக்கின்ற மகிமைக்கு எம்மாத்திரம் என்று எழுதினார். பொதுமக்கள் மத்தியில் நல்ல நம்பிக்கையைப் பரப்பியவர்கள் கார்ல் மார்க்ஸ், சுப்பிரமணிய பாரதி, வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற மேதைகள்.

1488ல் இந்தியாவுக்கு புதிய கடற்பாதை கண்டு பிடிக்கின்றேன் என்று புறப்பட்டார் கப்றால் என்ற போர்த்துக்கேய மாலுமி. ஆபிரிக்காவின் தென் கோடிக்கு சென்று விட்டு திரும்பினார். ஆபிரிக்காவின் தென் முனைக்குப் "புயல் முனை" என்று பேரிட்டார். போர்த்துக்கல் மன்னன் மூன்றாவது ஜோன், அது புயல் முனையல்ல நன் நம்பிக்கை முனை என்றார். 1498 ல் வஸ்கோடகாமா இந்தியாவுக்கு பாதையைக்கண்டு பிடித்தார். அழுகுணிச் சித்தருக்கு எல்லாமே புயல் முனை. வெற்றி வீரர்கள் தடைக்கற்களைப்படிக்கற்களாக்குவர்.

இன்று நம்மிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தும் அனேக விடயங்கள் நடைபெறுகின்றன. ஆனால் இவற்றிலும் மோசமான சூழலிலிருந்தும் மக்கள் விமோசனம் பெற்றிருக்கிறார்கள்: ஒரு காலகட்டத்தில் போலந்து என்ற நாடே உலகப் படத்திலிருந்து மறைந்தது. அயல் நாடுகள் அதனைப் பங்கு போட்டுக்கொண்டன. இன்று அது மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இதற்குக் காரணம் என்ன? வைரமுடைய நெஞ்சங்கள் தான்.

புத்தாயிரம் வருடத்தின் புது நம்பிக்கையோடு பிரவேசிப்போம்: இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு காலடி எடுத்து வைப்போம். புத்தாயிரம் நல்ல முறையில் அமையும் என்பதிற் சந்தேகமில்லை.



எஸ். ஜே. எழுதுவது

# கந்தர் மடத்து அன்பு உள்ளம்

சென்ற வருடத்தின் முற்பகுதியில் சாவகச்சேரி திருச்சபையின் பொருளாளரும் இளைப்பாறிய தபால் அதிபருமாகிய எஸ். அரியரத்தினம் என்னை ஒரு முறை கொழும்பில் சந்தித்தார். நாம் இருக்கின்ற தொடர் மாடியில் திரு ஏ. என். யோகநாதன் என்றவொரு இளைப்பாறிய பொறியியளாளர் இருக்கின்றார். அவர் உங்கள் கட்டுரைகளையும், பேட்டிகளையும் வாசித்தவர். உங்களது பேச்சுகளையும் கேட்டிருக்கின்றார். அவர் தாம் சேகரித்த நூல்கள் அனைத்தையும் உங்களுக்கு கொடுத்துவிட விரும்புகின்றார். அவரைச் சந்தியுங்கள் என்று கூறினார்.

சில நாட்களின் பின் திரு ஏ. என். யோகநாதனை அவர் தங்கி இருந்த இடத்தில் சந்தித்தேன். வயது அறுபதுக்கு மேல் இருக்கும்; பொறியியலாளர் ஆனால் அரசியல், தத்துவம், சமயம் எல்லாவற்றிலும் பரந்த அறிவு இருந்தது. முகத்திலே சாந்தம். தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி மனதிற்குள் வேதனை.

கந்தர் மடத்தில் எனது வீட்டில் நான் சேகரித்த நூல்கள் இருக்கின்றன. நீங்கள் அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். எனது வீட்டில் இருப்பவர்களுக்கு உங்களைப் பற்றி எழுதுகின்றேன் என்றார் திரு யோகநாதன். நான் யாழ்ப்பாணத்திற்கு வந்தவுடன் அவரது உறவினர்களையும் அவரது வீட்டில் இருப்பவர்களையும் சந்தித்து பேசினேன். அங்கிருந்த சில நூல்களுடன் வெளியேறினேன். அன்பர் யோகநாதன் என்னை விடவில்லை. என்ன? சில நூல்களைதானே எடுத்தீர்களாம். எல்லாவற்றையும் அல்லவா உங்களுக்கு கொடுக்குபடி சொன்னேன் என்று தொலைபேசி மூலம் குமுறினார்.

ஒரு பொறியியலாளனிடம் எனக்கு வேண்டிய புத்தகம் என்ன இருக்கப்போகின்றது என்று கந்தர் மடத்திற்கு திருப்பவும் சென்றேன். திரு. யோகநாதனின் படிப்பு அறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருந்த நூல்களைகண்டவுடன் நான் திகைத்துப்போனேன். வரலாறு, சமயம், இலக்கியம் எத்தனையோ துறைகளில் எத்தனையோ வருடங்களாகச் சேகரிக்கப்பட்ட நூல்கள். திருக்குறளைப் பற்றிய நூல்களில் மட்டும் நூற்றியம்பதிற்கு மேல். அவற்றில் சில விலைமதிக்க முடியாதவை. திரு. யோகநாதன் ஒரு திருக்குறள் பைத்தியம் என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன். அவர் இருந்த வீட்டுக்காரரும் அவர் ஒரு திருக்குறள் பைத்தியம் என்று கூறினார்கள். "கொள்ளையை பங்கிட்டு கொள்வதில் மகிழ்ச்சி அடைவதுபோல" ஒரு வாகனத்தைக் கூலிக்கு அமர்த்தி அத்தனை நூல்களையும் வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தேன். திரு யோகநாதன் அவர்கள் ஒரு சைவ பக்தர். ஆனால் பல சமயங்களைக் குறித்து பல நூல்களை சேகரித்து வைத்திருந்தார். சில கிறிஸ்தவ இறையியல் நூல்கள் தேடற்கரியன. அவர் தொகுதிகளோடு அவை இருந்தன. இவ்வளவு பரந்த மனப்பான்மை படைத்த ஒருவர் கந்தர் மடத்தில் இருந்தார் என்று முன்னர் தெரியவில்லையே என்று வேதனைப்பட்டேன். திரு யோகநாதன் சேர்த்த நூல்க்ள். எனக்கு கிடைத்தமை என் வாழ்வில் ஏற்பட்ட பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

திருவள்ளுவர் மீது எனக்கிருந்த பற்றினால் ஒரு புத்தகத் தட்டை செய்வித்து குறள் சம்பந்தமான நூல்களை மட்டும் அதிலே வைத்துக்கொண்டேன்.

திரு யோகநாதனை மீண்டும் கொழும்பில் சந்தித்தபோது திருவள்ளுவரைப் பற்றிய பேச்சு வந்தது. கடந்த ஆயிரம் வருடங்களில் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய மாமனிதர் திருவள்ளுவர் என்று அடித்து கூறினேன். இந்த விஷயத்தை ஒட்டி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதவுள்ளேன் என்றும் குறிப்பிட்டேன். எப்போ? எப்போ? என்றார் குறள் அன்பர். இந்த வருடம் முடிவதற்குள் என்று வாக்குறுதி அளித்தேன். திரு யோகநாதனையும் அவரை என்னிடம் அழைத்துவந்த திரு அரியரத்தினம் அவர்களையும் நினைக்கின்ற போது என் மனம் நன்றியுணர்வால் பூரிக்கின்றது.

## வின்சிலோ அம்மையார் நூல் தமிழாக்கம்

உடுவில் மகளிர் கல்லூரியின் முதலாவது அதிபர் ஹரியட் வின்சிலோ அம்மையாரின் இனக்குறிப்பு மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரிக்கப் படவிருக்கின்றது. இம் மொழிபெயர்ப்பு நூல் 09 - 04 - 2000 அன்று வெளியிடப்படும் எனத் தெரிகின்றது: இம் மொழி பெயர்ப்பு வேலையைத் வண டி ஆர் அம்பலவாணர் மேற்கொண்டு வருகின்றார்.

## வேதநாயக சாஸ்திரி தினம்



ஜனவரி மாதம் 20 திகதி கிறிஸ்தவ கவிஞர் சாஸ்திரி தினமாகும். இப்பொழுது நாம் பாவிக்கும் திருச்சபைப் பாட்டுப் புத்தகத்தில் அவர் (வே. சா) இயற்றிய பாடல்கள் 31 சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வளவு பெருந்தொகையான பாடல்களை வேறெந்த கவிஞர் தொகுயிலிருந்தும் நாம் எடுத்துக் கொள்ளவில்லை: பக்தி. எளிமை, இனிமை அப்பாடல்களில் இழையோடுகின்றன. இவர் 1774 ம் ஆண்டு பிறந்தார் 1864 ல் மறைந்தார்,

தகப்பனார் தேவசகாயம் பிள்ளை பாளையங் கோட்டையில் உபதேசிகராகவிருந்தார்.

சுவாட்ஸ் ஐயர் பாளையங் கோட்டைக்குப் போனபொழுது விடுதியொன்றில் ஜெபம் செய்து விட்டு நித்திரைக்குச் சென்ற ஒரு சிறுவனைக்கண்டார்,

அவனைப்பெரியவனாக்குகிறேன் என்று சொல்லித் தன்னுடன் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்றார். அவர்தான் வேதநாயகம்!

சுவாட்ஸ் ஐயர் தஞ்சாவூர் இளவரசன் சரபோஜியின் ஆசிரியர். எனவே வேதநாயகரையும், இளவரசரோடு சேர்த்துக்கற்பித்தார்.

பால்ய நட்பு சரபோஜி மன்னர் இறக்கும் வரை நீடித்திருந்தது. இந்த கிறிஸ்தவ கவிஞர், தஞ்சை மன்னரின் ஆஸ்தான கவிஞரானார்.

சுவாட்ஸ் ஐயர் வேதநாயகருக்குக் கல்வியை ஆரம்பிக்கு முன்னர் ஒரு சங்கீதப் புத்தகமும் வேதசாஸ்திர புஸ்தகமும் கொடுத்தார். தமது குருநாதரைப்பற்றி வேதநாயகர் பின்வருமாறு பாடியுள்ளார்:

"சங்கீதத்தையும் தான்
கொடுத்தான்
வேதசாஸ்திரத்தையும் தான்
கொடுத்தான்
சங்கீதத்திற்கும் சாஸ்திரத்திற்கும்
சமஸ்தனாக்கினான் ஞானப்
பெண்ணே.

வேதநாயகர் தமது 18 வது வயதில் "பெத்தலேம் குறவஞ்சி" யைப் பாடிமுடித்தார்.

வேதநாயகரின் சிறந்த கொடை அவர் இயற்றிய கீர்த்தனைகள். இதற்கு முன்பு ஞானப்பாடல்களே (Hymns) கிறிஸ்தவ வழிபாடுகளில் பாடப்பட்டன. கிறிஸ்துவின் அடிமையாகவிருப்பதனையே பேறாகக்கொண்டார்.

(2 ம் பக்கம் பார்க்க)

## The Presidential Election and After

The Presidential Election has come and gone. Mrs Chandrika Bandaranaike Kumaranatunge polled 42 121 57 votes which was 51. 1 percent of the total votes polled. Her nearest rival Mr. Ranil Wickremasinghe was able to secure 36 020 78 or '42- 7 per cent of the votes polled. At the Presidential election of 1994. Mrs. Chandrika Bandaranaike Kumaranatunge was able to get 62. 2 percent of the total votes cast.

This year a large segment of the Tamils have voted against her. No doubt they were disillusioned with the developments after the break down of peace talks in 1995. Many of them voted for the U N P leader Mr. Mr. Ranil Wickremasinghe and a few had voted for Mr Vasudeva Nananayakara as requested by the Tamil United Liberation Front.

The minorities in Sri Lanka want peace!. They are humiliated harassed, fleecd and treated like criminals. They have to depend entirely on the goodness of some decent and respcetable military officers. The position of the Sri - Lankan Tamils deteriorated steadily. They are not even second class citizens. They are suspects, who could not be given any position in the government or in private Sector.

Alms I do not want Madam please hold the dog.

This was the plea of a frightened begger (pitchai Vendom Thaye Nayai pidy) Many Tamils in Sri Lanka have ben repeating this proverb. During the past seventeen years it was a case of dentention, intimidation, inquriry, jail and torture, with no light at the end of the tunnel.

However some Tamil intellectuals genuinely feel that they need not despair. It is foolish to expect the main apposition party to co - operate with the Government to find a solution to the ethnic problem. The silver lining is the unique position of Mrs. Chandrika Bandaranaike Kumaranatunge. She has won the election for the second time. She will not go to the people again asking for their support. The President of Sri - Lanka can held office only for two terms. Is it wrong to expect that she will do her utmost to find a lasting solution to the ethnic proslem. She may like to go down in history as the person who saved the unity of the nation like Abraham Lincoln, William Gladstone or Robert Peel. She can afford to lose the friendship of Sinhala chauvinists.

It is not clear whether she can get the support of her party armed forces and the Sinhaless people for her devolution package of August 1995 which was well recieved by Tamil politicians. Later it was watered down because of stiff opposition from the South. The devolution package in the present stage is rather inadequate. Let as hope and pray that the new millennium brings peace it our troubled home land, under the leadership of Madame President May God protect her in these perilous times and give her courage to make our country once again a land of peace and plenty.

## Jaffna today...

completely master the methods. Furthermore basic questions arise, whether isolated training events contribute to institutionlising participatory approaches due to the authoritarian management styles of bureaucrats.

### Arrests

Arrests on suspicion are on the increase and youths are in fear. After questioning some are released while others are detained in the Kankesanturai Detention Camp. Some others are taken to Anuradhapura for trial before the High Court Judge. In the absence of a Court in Jaffna, parents and guardians face the hazardous problem of travel out of Jaffna.

### Education

A large number of vacancies in the teachers cadre continue to remain unfilled. Certain schools in remote areas are bereft of teachers. This is one of the main reasons for the lowered standards of education reflected in the GCE O/L results. Many damaged schools have also not been fully rehabilitated and eqipped.

### Health

Media reports pinpoint shortages of medical staff and drugs. Certain units are not even manned by an Assistant Medical Practitioner. In the absence of ambulance services to these units, seriously ill patients find difficulty in gaining admission to the district hospitals or the Jaffna Teaching Hospital. These shortcomings would have to be rectified for a better health service in Jaffna.

## The Polling in other Electorates were as follows.

KAYTS:
Ranil — 3580
Chandrika — 3377

VADDUKODDAI:
Chandrika — 6854
Ranil — 4232

MANIPAY:
Chandrika — 9194
Ranil — 5003

KOPAY:
Chandrika — 6607
Ranil — 5941

UDDUPIDDY:
Ranil — 5686
Chandrika — 4664

POINT. PEDRO:
Ranil — 4270
Chandrika — 3062

CHAVAKACHCHERI:
Ranil — 7494
Chandrika — 3430

NALLUR:
Chandrika — 5125
Ranil — 4834

K. K. S.
Chandrika — 5325
Ranil — 2271

KILINOCHI:
Ranil — 1262
Chandrika — 593

### Human Rights

Inclusive of missing persons, a total number of 67 cases of violations of human rights have been recorded at the Human Rights Commission (HRC) office in Jaffna. Four of the missing persons have been traced. The Co-ordinating Officer HRC Jaffna has said that 47 persons have been held in the Army Detention Camp at K K S.

### Agriculture

Due to heavy rains (more than 20 millimeters) during October and the consequent inundation, the paddy crop which was at the germination stage has been affected. The District Agriculture Committee meeting although held monthly at the Jaffna District Secretariat does not host farmer representatives. As a result the deliberations are sector centred and not people oriented.

### Transport

Transport services have not been streamlined during the last three and a half years. A regular, safe comfortable, and speedy passenger ship service has not been provided by the government to facilitate travellers. This is a dire need of the public and hundreds of people are stranded in towns like Trincomalee, Vavuniya Mannar and Colombo. Also filghts are irregular and unsatisfactory despite exhorbitant charges made. The bus service in the peninsula is deteriorating day by day and of the fleet of buses, many are non roadworthy. The garaged buses also cannot be repaired due to a of lack of spare parts.

P. Vigneswaran
President NGO Council Jaffna

## Tamil Wisdom Proverbs on Exertion

அப்பாசுவாமிக்குக் கலியாணம், அவர் அவர் வீட்டிலே சாப்பாடு, கொட்டு மேளம் கோவிலிலே, வெற்றிலைபாக்கு கடையிலே, சுண்ணாம்பு குளையிலே.

Appaswmy's wedding being performed. The guests have to dine in their own houses; the drum is beaten in the temple; betel leaf and areca nut are to be had at the shops; and at the kiln they can get lime (to chew with betel)

Said of a miser, or more commonly of a person who has the knack of getting what he wants at the expense of others.

ஆக்கி அரைத்துப் போட்டவள் கெட்டவள், வழிகூட்டி அனுப்பினவள் நல்லவள்.

She who prepared the food and served it, is taken no notice of; she who was sent to start you on your journey is praised.

The one who does the work is often overlooked.

"Another threshed what I reaped."

இட்டவர்கள் தொட்டவர்கள் கெட்டவர்கள், இப்போது வந்தவர்கள் நல்லவர்கள்.

Those who give and those who help are despised, new comers are honomred.

Said, for instance, by old servants when a new - comer is favoured or promoted.

இடித்தவள் புடைத்தவள் இங்கே இருக்க, எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாள்.

While the woman who pounded and sifted the rice is left here, she who only looked on has gone off with it all.

Said by a mother-in-law about a daughter - in - law who gets the benefit of all her economy and thrift.

"One man knocks in the nail, and another hangs his hat on it."

ஊர் கூடி செக்கு தள்ள, வாணியன் எண்ணெய் கொண்டு போக,

The whole village helped to work the oil mill, but the oil merchant took the oil away

"Little dogs start the hare, the great get her."

எலி கட்ட, பாம்பு குடி கொள்ள,

The rat makes (the hole) the snake inhabits it.

"Fools build houses, and wise men live in them."

(Continued in next issue)

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka: News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 15th January 2000 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.